செ.வெ.எண். 34 நாள்: 14.11.2021

**68 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் இன்று (14.11.2021) கொடியேற்றியும், மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார்.**

கிருஷ்ணகிரி நகராட்சி, காந்திரோட், கிருஷ்ணகிரி வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில், 14.11.2021 முதல் 20.11.2021 வரை 68 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெறுவதையடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் இன்று (14.11.2021) கூட்டுறவு சங்க கொடியேற்றியும், மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டுறவு வாரவிழா உறுதிமொழியை அனைத்து அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்டுறவு வார விழா உறுதி மொழி வாசிக்க:

கூட்டுறவுவாளர்களாகிய நாம் இந்திய நாட்டின் முன்னேற்றம் ஒருமைபாட்டிற்கு நம்மால் இயன்ற வகைகளில் எல்லாம் பணியாற்ற உறுதி கொள்கிறோம். உலகின் அனைத்துப் பகுதிகளில் உள்ள கூட்டுறவாளர்களுடன் சேர்ந்து, ஒருமனதாக பாடுபடுவதுடன் பல்வேறு நாடுகளுக்கிடையே நிலையான சமாதான நல்வாழ்வை ஏற்படுத்த பாடுபடுவதென உறுதிகொள்கிறோம். உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், வாழ்வில் பின்தங்கியுள்ளவர்களின் சமூகப் பொருளாதார நிலை மேம்படவும் பாடுபடுவது, கூட்டுறவு நிறுவனங்களின் இலட்சியம் என்பதால், அந்த மகத்தான பணியில் கூட்டுறவாளர்ளாகிய நாம் தீவிவரமாக ஈடுபட்டு தொண்டாற்ற உறுதி கொள்கிறோம்.

''கூட்டுறவே நாட்டுயர்வு கூடி வாழ்ந்தால் கோடி நன்மை''

இந்த இலட்சிய உணர்வு எங்கும் ஒலித்து இன்ப கீதமாக இந்த நாட்டில் எழுச்சி உருவாக்க கூட்டுறவுத் தத்துவங்களை அனைத்து வகையிலும் கடைபிடித்து, அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வோமென உறுதி கொள்வோம் என அனைத்து கூட்டுறவு அலுவலர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்கள்இணை பதிவாளர் திரு. எம் ஏகாம்பரம், துணை பதிவாளர் திரு.ப.சுந்தரம் மற்றும் அனைத்து கூட்டுறவு சங்க பணியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.